திணைக்களச் சுற்றறிக்கை இலக்கம் :- 06/2006

அனைத்து மாவட்டச் செயலகங்கள்/பிரதேசச் செயலகங்கள்

## கலாசார அலுவல்கள் திணைக்களம்

## தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி - 2026

புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கீழ் உள்ள கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால், எழுத்துத் துறைக்கு பிரவேசிக்க எதிர்பார்க்கும் புதிய எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் நோக்குடன், 2026 ஆம் ஆண்டில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டியொன்றை ஏற்பாடு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேசிய கையெழுத்துப் போட்டித் தொடருக்காக 2022 ஆம் ஆண்டில் இறுதியாக வெளியிடப்பட்ட சுற்றறிக்கை இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றது.

2026 தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டிக்கான செல்லுபடியாகும் போட்டி நிபந்தனைகள் பின்வருமாறு.

01. தொடர்புடைய விடயங்கள்
   i. நாவல்கள்
   ii. சிறுகதைகள்
   iii. கவிதைத் தொகுப்புகள்
   iv. இளையோர் நாவல்
   v. சிறுவர் கதைகள்
   vi. அறிவியல் புனைகதைகள்
   vii. நாட்டுப்புறவியல்
   viii. விமர்சன நூல்கள் (இலக்கியம்/சினிமா)
   ix. கல்விசார் மற்றும் ஆராய்ச்சி நூல்கள் - (நடனம், இசை, சித்திரம், சிற்பம், சினிமா, புகைப்படம், நாடகம், மக்கள் தொடர்பாடல், தொல்பொருள்வியல், வரலாறு, சமயம்)

02. விண்ணப்பதாரர் ஒருவர் ஒரு போட்டிப் பிரிவிற்கோ அல்லது அனைத்துப் போட்டிப் பிரிவுகளுக்கோ விண்ணப்பிக்க முடியும். எனினும், ஒரு போட்டித் தலைப்பின் கீழ் ஒரு படைப்பை மாத்திரமே சமர்ப்பிக்க முடியும். அனைத்துக் கையெழுத்துப் பிரதிகளும் பின்வருமாறு கணினிமயப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், அச்சிடுவதற்காகப் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் அதன் மென் பிரதி (Soft copy) எமக்கு வழங்கப்பட வேண்டும்.

- எழுத்து வகை (Font Type) - Kalaham
- எழுத்தின் அளவு (Font Size) - 12
- பக்கங்கள் - 50 பக்கங்களுக்கு குறையாமலும் 500 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.
- பக்கங்களின் எண்ணிக்கை 400 ஐ விடக் குறைவாக இருப்பின், கையெழுத்துப் பிரதியானது A5 அளவிற்கமைய பக்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் (Page Setup).
- பக்கங்களின் எண்ணிக்கை 400 ஐ விட அதிகமாக இருப்பின், கையெழுத்துப் பிரதியானது A4 அளவிற்கமைய பக்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் (Page Setup).
- கையெழுத்துப் பிரதியில் சித்திரங்கள் அல்லது புகைப்படங்கள் உள்ளடக்கப்படுமாயின், அச்சித்திரங்கள் அனைத்தும் வருடப்பட்டிருக்க (scan) வேண்டும் என்பதுடன், அச்சிடுவதற்காகப் பரிந்துரைக்கப்படும் பட்சத்தில் அதன் மென் பிரதி (Soft copy) எமக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.

CamScanner

03. சித்திரங்களைக் கொண்ட சிறுவர் கதை கையெழுத்துப் பிரதிகள் A4 அளவில் பக்கங்கள் ஒழுங்கமைக்கப்பட்டிருக்க வேண்டும் (Page Setup). பொதுவாக சிறிய பிள்ளைகளுக்காக (10 வயது அல்லது அதற்குக் குறைந்த) எழுத்தின் அளவு (Font Size) 14 அல்லது 16 ஆக இருத்தல் வேண்டும். ஏனைய வயதுப் பிரிவினருக்கான சித்திரங்களைக் கொண்ட சிறுவர் கதைகளுக்கு பொருத்தமான எழுத்து அளவுகளைப் பயன்படுத்த முடியும். அனைத்துச் சித்திரங்களும் உரிய வண்ணங்களுடன் உயர் தரத்தில் கணினி மூலமாகவோ அல்லது கையாலோ வரையப்பட்டிருக்க வேண்டும் என்பதுடன், எக்காரணம் கொண்டும் **வர்ணப் பென்சில்கள் (Color pencils) அல்லது பெஸ்டல் (Pastel) வகைகளைப் பயன்படுத்தக் கூடாது.** கையால் வரையப்பட்ட அனைத்துச் சித்திரங்களும் வருடப்பட்டு (scan) கையெழுத்துப் பிரதியில் உள்ளடக்கப்பட வேண்டும். சிறுவர் கதை கையெழுத்துப் பிரதியானது அட்டைப் படம் நீங்கலாக 16 பக்கங்களுக்குக் குறையாமல் இருத்தல் வேண்டும்.

04. இந்தப்போட்டியானது வயது எல்லை பாராது அறிமுக எழுத்தாளர்களை (ஆரம்பநிலை எழுத்தாளர்கள்) ஊக்குவிப்பதற்காக மாத்திரம் நடத்தப்படுகின்றது என்பது கவனத்திற் கொள்ளத்தக்கது. **"இங்கு கன்னி எழுத்தாளர் என்பவர், இதுவரையில் எந்தவொரு விடயப்பரப்பிலும் தனது படைப்புக்களை அச்சுருவில் வெளியீடு செய்யாத ஒரு எழுத்தாளர் என்பதைக் குறிக்கும்".** போட்டியாளர் ஒரு அறிமுக எழுத்தாளர் அல்ல என்பது தெரியவரும் பட்சத்தில், அவர் போட்டிக்குத் தகுதியற்றவராகக் கருதப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

05. கையெழுத்துப் பிரதியில் அந்தப் படைப்பின் பெயர் மாத்திரமே குறிப்பிடப்பட வேண்டும். உங்களது பெயர் அல்லது அடையாளக் குறியீடுகள் எதனையும் கையெழுத்துப் பிரதியின் எவ்விடத்திலும் குறிப்பிடக்கூடாது. அர்ப்பணிப்பு (சமர்ப்பணம்), முன்னுரை, பின்னுரை ஆகியவற்றை கையெழுத்துப் பிரதியுடன் சமர்ப்பிக்கக் கூடாது. இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் உங்களது தகவல்கள் தெளிவாகக் குறிப்பிடப்பட வேண்டும். (இணைப்பு 01)

06. இந்தப் போட்டிக்காக அறிமுக எழுத்தாளர்களினால் சமர்ப்பிக்கப்படும் கையெழுத்துப் பிரதிகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் விடய நிபுணர்களைக் கொண்ட நூல் நடுவர் சபையினால் மதிப்பீடு செய்யப்படும். நடுவர் சபையின் பரிந்துரையின் பேரில் பெறப்படும் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் அச்சிடுவதற்கான கையெழுத்துப் பிரதிகள் தெரிவு செய்யப்படும். இந்தத் திட்டத்திற்காக அந்தந்த ஆண்டிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீடுகளைக் கருத்திற் கொண்டு அச்சிடப்படும் கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

07. விண்ணப்பதாரர் ஒரு அறிமுக எழுத்தாளர் என்பதையும், இதற்கு முன்னர் எவ்விடயப்பரப்பிலும் நூலொன்றை அச்சுருவில் வெளியிடவில்லை என்பதையும், போட்டி நிபந்தனைகளை மீறினால் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் எடுக்கப்படும் எத்தகைய தீர்மானத்திற்கும் இணங்குவதாகவும் சத்தியக்கடதாசி மூலம் உறுதிப்படுத்த வேண்டும். ஒரு சத்தியக்கடதாசியுடன் மூன்று (03) கையெழுத்துப் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

08. நடுவர் சபையினால் ஏதேனும் ஒரு கையெழுத்துப் பிரதி அச்சிடுவதற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், அதன் வெளியீட்டு உரிமையை ஒரு வருட காலத்திற்கு கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக இருதரப்பு ஒப்பந்தமொன்றில் கையொப்பமிட வேண்டும். இருதரப்பு ஒப்பந்தத்தின்படி, உடன்படிக்கை செய்யப்பட்ட மொத்தப் பிரதிகளின் விலையில் 10% பெறுமதிக்குச் சமமான புத்தகங்கள், அச்சிடல் பணிகள் நிறைவடைந்தவுடன் நூலாசிரியருக்கு ஆசிரியர் பாகமாக (Royalty) ஒரே தடவையில் வழங்கப்படும்.

09. நடுவர் சபையினால் ஏதேனும் ஒரு கையெழுத்துப் பிரதி அச்சிடுவதற்காகத் தெரிவு செய்யப்படும் பட்சத்தில், கையெழுத்துப் பிரதியின் பெயரை மாற்றுவதற்கோ, தொகுப்பதற்கோ (Editing), மேலதிகப் பகுதிகளைச் சேர்ப்பதற்கோ அல்லது கையெழுத்துப் பிரதியிலுள்ள பகுதிகளை நீக்கிவிட்டு மீண்டும் பகுதிகளைச் சேர்ப்பதற்கோ எவ்விதத்திலும் சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன், அத்தகைய கோரிக்கைகள் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. அவ்வாறான கோரிக்கைகள் முன்வைக்கப்படும் பட்சத்தில், ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பின்னராயினும் அதன் முடிவுகளை ரத்து செய்யும் அதிகாரம் கலாசாரப் பணிப்பாளருக்கு உண்டு.

10. உங்களது கையெழுத்துப் பிரதி வெற்றிபெற்று அச்சிடுவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், மீண்டும் ஒருமுறை அறிமுக எழுத்தாளர் (ஆரம்பநிலை எழுத்தாளர்) எனும் அடிப்படையில் கையெழுத்துப் போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன், அத்தகைய படைப்புகள் நிராகரிக்கப்படும்.

CamScanner

அடிப்படையில் கையெழுத்துப் போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படமாட்டாது என்பதுடன், அத்தகைய படைப்புகள் நிராகரிக்கப்படும்.

11. கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாளர்கள் எவரும் இக்கையெழுத்துப் பிரதிப் போட்டியில் பங்குபற்ற முடியாது.

12. ஒரு கையெழுத்துப் பிரதிப் படைப்பிற்காக இரண்டு விண்ணப்பதாரர்களின் பெயர்களைச் சமர்ப்பிக்க முடியாது. வெளிநாட்டில் வசிக்கும் ஒரு விண்ணப்பதாரராயின், முகாமைத்துவ அதிகாரப் பத்திரம் (Power of Attorney) மூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபர் ஊடாக கையெழுத்துப் பிரதியைச் சமர்ப்பித்தல் மற்றும் அது தொடர்பான ஏனைய நடவடிக்கைகளை முன்னெடுத்தல் வேண்டும்.

13. வெற்றிபெற்ற கையெழுத்துப் பிரதியொன்று எம்மால் தெரிவு செய்யப்பட்டு அச்சிடுவதற்காக அனுப்பப்பட்ட பின்னர், அக்கையெழுத்துப் பிரதியைத் திரும்பப் பெறுவதற்கோ அல்லது இருதரப்பு ஒப்பந்தத்தை ரத்துச் செய்வதற்கோ கோரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில், அதுவரை அச்சிடல் பணிகளுக்காகத் திணைக்களத்தினால் செலவிடப்பட்ட தொகையை விண்ணப்பதாரர் கலாசார அலுவல்கள் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும்.

14. விண்ணப்பப்பரிவொன்றைச் சமர்ப்பித்த பின்னரிலிருந்து அதன் முடிவுகள் வெளியிடப்படும் வரையிலான காலப்பகுதியில், தனிப்பட்ட ரீதியிலோ அல்லது நிறுவனமொன்றின் ஊடாகவோ அந்த கையெழுத்துப் பிரதியை அச்சிடுதல் கூடாது. அவ்வாறு அச்சிடப்படும் பட்சத்தில், மேலே 13 ஆவது விடயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் செலவிடப்பட்ட தொகையை விண்ணப்பதாரர் செலுத்த நேரிடும்.

15. வெற்றிபெற்ற கையெழுத்துப் பிரதிகளை அச்சிடுவதற்காக ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்ட பின்னர், சம்பந்தப்பட்ட எழுத்தாளர் ஒரு கன்னி எழுத்தாளர் (ஆரம்பநிலை எழுத்தாளர்) அல்ல என்பது உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், அச்சிடுவதற்காகச் செலவிடப்பட்ட தொகையை அவர் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டும்.

16. அச்சிடுவதற்குப் பரிந்துரைக்கப்படாத உங்களது கையெழுத்துப் பிரதிகளை 011-4321095 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பினை ஏற்படுத்தி, வாரத்தின் வேலைநாட்களில் மு.ப. 8.30 முதல் பி.ப. 4.00 மணி வரையான காலப்பகுதிக்குள் அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ள முடியும்.

17. இந்தப் போட்டி தொடர்பாக நடுவர் சபையின் பரிந்துரையின் பேரில் கலாசார அலுவல்கள் பணிப்பாளரினால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதித் தீர்மானம் என்பதை விண்ணப்பதாரர்கள் ஏற்றுக்கொண்டு இணங்க வேண்டும்.

18. உங்களது விண்ணப்பப் படிவம் மற்றும் கையெழுத்துப் பிரதியை **2026.06.30 ஆம் திகதிக்கு முன்னர் கலாசார அலுவல்கள் பணிப்பாளர், கலாசார அலுவல்கள் திணைக்களம் (வெளியீட்டுப் பிரிவு), 8 ஆம் மாடி, செத்சிறிபாய,** பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அல்லது குறித்த முகவரிக்கு நேரில் வருகை தந்து ஒப்படைக்க முடியும். கையெழுத்துப் பிரதி இடப்படும் உறைக்கு மேலதிகமாக அதன் மேல் மூலையில் **"தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி-2026"** எனக் குறிப்பிடப்பட வேண்டும். தபாலில் ஏற்படும் தாமதங்கள் மற்றும் காணாமல் போதல்கள் தொடர்பாக திணைக்களம் பொறுப்பேற்க மாட்டாது.

**கவனிக்கவும்** - நூல் தயாரிப்பு முறைமை தொடர்பான தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் நூல் தயாரிப்பு முறைமை கையேட்டினை ***https://share.google/u42bYDx9V6Dw9p1vd*** என எனும் இணைய இணைப்பின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

**கே.எஸ். தில்ஹானி**
பணிப்பாளர்
கலாசார அலுவல்கள் திணைக்களம்
2026 மே மாதம் 06ம் திகதி

K.S. Dilhani
Director
Department of Cultural Affairs
Sethsiripaya, Battaramulla

CamScanner

இணைப்பு (01)

2x2 வர்ணப் புகைப்படத்தை இங்கே ஒட்டவும்

கலாசார அலுவல்கள் திணைக்களம்
வெளியீட்டுப் பிரிவு
08 ஆம் மாடி, செத்சிறிபாய, பத்தரமுல்ல.
விசாரணைகள் - 011-4321095 / www.culturaldept.gov.lk

## தேசிய கையெழுத்துப் பிரதிப் போட்டி - 2026

## மாதிரி விண்ணப்பப் படிவம்

01. விண்ணப்பதாரரின் முழுப் பெயர் :-..........................................................
:-..........................................................

02. நிரந்தர முகவரி :-..........................................................
:-..........................................................

03. தேசிய அடையாள அட்டை இலக்கம் :-..........................................................

04. தொலைபேசி இலக்கம் :-..........................................................
கைபேசி :-..........................................................
வீடு :-..........................................................

05. மின்னஞ்சல் முகவரி (Email address) :-..........................................................

06. பிரதேச செயலகப் பிரிவு :-..........................................................

07. மாவட்டம் :-..........................................................

08. போட்டியிடும் தலைப்பு :-..........................................................

09. கையெழுத்துப் பிரதியின் பெயர் :-..........................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், இத்துடன் சமர்ப்பிக்கப்படும் கையெழுத்துப் பிரதியானது இதற்கு முன்னர் எந்தவொரு போட்டிக்கும் சமர்ப்பிக்கப்படாத எனது சொந்தப் படைப்பு என்றும், இதற்கு முன்னர் எந்தவொரு ஊடகத்தினூடாகவும் அல்லது எந்தவொரு விடயப்பரப்பிலும் எந்தவொரு நூலையும் அச்சிட்டு வெளியிடவில்லை என்றும் நான் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இப்போட்டித் தொடர் தொடர்பாக கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளரினால் விதிக்கப்பட்டுள்ள போட்டி நிபந்தனைகளை ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுவதுடன், நான் ஒரு கன்னி எழுத்தாளர் (ஆரம்பநிலை எழுத்தாளர்) அல்ல என்பது தெரியவரும் பட்சத்தில், அச்சிடுவதற்காகச் செலவிடப்பட்ட தொகையைச் செலுத்துவதற்கும் உடன்படுகின்றேன். அத்துடன், குறித்த போட்டி நிபந்தனைகளை நான் மீறியுள்ளமை நிரூபிக்கப்படும் பட்சத்தில், எனது முடிவுகளை ரத்துச் செய்வதற்கு உடன்படுகின்றேன் என்றும் இத்தால் சான்றளிக்கின்றேன்.

.............................................
திகதி

.............................................
கையொப்பம்

CamScanner